தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 66/ந/2023
நாள் 14.08.2023

திரு.V.பழனிவேலு,
மயிலாடுதுறை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
மயிலாடுதுறை நகராட்சி. – எதிர் மனுதாரர்

மயிலாடுதுறை, கொறநாடு, திருமஞ்சனவீதி, கதவு எண்.48 என்ற முகவரியில் வசிக்கும் திரு.V.பழனிவேலு என்பவரின் 16.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.03.2023 அன்று பெறப்பட்டு 066/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மயிலாடுதுறை, கொறநாடு, திருமஞ்சனவீதி, கதவு எண்.48 என்ற முகவரியில் வசிக்கும் திரு.V.பழனிவேலு என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

" மயிலாடுதுறை நகராட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை பரிசீலனை செய்ததில் கீழ்க்கண்ட விபரப்படி நகராட்சி சார்ந்த வழக்குகளுக்கு வழக்கறிஞர் கட்டணம் கொடுப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வழக்கறிஞர் கட்டணம் அதிகமாக வழங்கப்பட்டதாக தெரிய வந்ததால் வழக்கறிஞர் கட்டண விபரம் கேட்டு தமிழ்நாடு சட்டப் பணிகள் குழுவிற்கு 27.01.2023–ல் விண்ணப்பம் செய்யப்பட்டது. இந்த விண்ணப்பம் 22.02.2023 நாளிட்ட கடிதம் வழியாக தமிழ்நாடு அரசின் சட்டத்துறை சார்பு செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஆனால் வழக்கறிஞருக்கு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டண விபரம் இதுவரை தரப்படவில்லை. எனவே வழக்கறிஞர் கட்டண விபரம் இணைய தளத்தில் தேடப்பட்டதில் தமிழ்நாடு சட்டப்பணிகள் குழுவின் கீழ்க்கண்ட கட்டண நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| Title suit before Dist, Munsif Court inclusive of Maintenance suit | – ரூ.3,800/- |
| Money suit | – ரூ. 3,800/- |
| Writ Petition before High Court, other than Habeas corpus | – ரூ. 5,000/- |
| For appeals, Second appeal C.M.As. | – ரூ. 5,000/- |
| For legal opinion . | – ரூ. 800/- |

ஆனால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தைவிட கூடுதலாக கட்டணம் வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:-

| வ. எண். | தீர்மானம் எண். நாள். | வழக்கு விபரம் மற்றும் வழக்கறிஞர் விபரம் | தீர்மானத்தின்படி வழக்கறிஞர் கட்டணம் | மாநில சட்ட உதவிக்குழு நிர்ணயித்த கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | 1011 26.02.2021 | W.P.No.20187 of 2020 Thiru.N.Inbanathan | ரூ.15,000/- | ரூ.5,000/- |
| 2 | 1177 30.11.2021 | Case details not furnished advance payment to Thiru.Rajmohan | ரூ.1,00,000/ | |
| 3 | 71 27.05.2022 | W.P.No.5851 of 2022 | ரூ.15,000/ | ரூ.5,000/- |
| 4 | 298 30.11.2022 | W.P.No.2231 of 2015 Thiru.P.Srinivas | ரூ.18,000/ | ரூ.5,000/- |
| 5 | 104 22.07.2022 | 697, 716, 732 of 2022 It is not Writ or suit without details | ரூ.25,000/ | |
| 6 | 148 22.07.2022 | S.A.794 of 2019. | ரூ.20,000/ | |

நிதிமுறைகேடு விபரம்:-

இனம் 1 (தீர்மானம் 1011 / 26.02.2021)

திரு.இன்பநாதன் என்பவர் அரசு வழக்கறிஞர் என்று தகவல் தரவில்லை. உயர்நீதிமன்றத்திற்கு அரசு வழக்கறிஞர் நியமனம் செய்யப்பட்டுள்ள நிலையில், நகராட்சி ஆணையர் பிரைவேட் வழக்கறிஞர் அமர்த்தியுள்ளது எந்த விதிகளின்படி அல்லது அரசாணையின்படி என்பதை நகராட்சி ஆணையர் தெரியப்படுத்தவேண்டும்.

நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் ரூ.5000/- ஆகும். எனவே ரூ.10,000/- நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

இனம் 2 (தீர்மானம் 1177 / 30.11.2021)

நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.ராஜ்மோகன் என்பவருக்கு ரூபாய் ஒரு இலட்சம் வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வழக்கு முடிவதற்கு முன்னதாகவே முன்பணமாக ரூபாய் ஒரு லட்சம் எந்த விதியின்படி அல்லது அரசாணையின்படி வழங்கப்பட்டது என்பது தெரியவில்லை.

நகர்மன்ற தீர்மானத்தில் வழக்கு எண். விபரம் ஏதும் இல்லை. 19 வரியில்லா இனங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சார்பு நீதிமன்ற இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விபரத்தின்படி 2021 ஆம் ஆண்டில் ஐந்து உரிமையியல் வழக்குகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது.

ரூபாய் ஒரு இலட்சம் முன்பணமாக வழங்க தமிழ்நாடு நகராட்சிகள் சட்டத்தில் வழிவகை செய்யப்படவில்லை. நிர்ணயம் செய்யப்பட்ட உரிமையியல் வழக்கு கட்டணம் 4 வழக்குகளுக்கு ரூ.15,200/– ஆகும். எனவே ரூ.84,800/– நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த வழக்கறிஞர் நகராட்சி தீர்மானம் எண்.61/27.05.2022–ன்படி மாற்றம் செய்யப்பட்டு திரு.எஸ்.சங்கரநாராயணன் என்பவர் நகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். எனவே ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்பட்டு ஆறு மாத காலத்திற்குள் வழக்கறிஞர் மாற்றப்பட்டுள்ள நிலையில் மேற்கண்ட வழக்குகள் முடியாத நிலையில் ரூ.84,800/– கூடுதலாக வழங்கப்பட்ட தொகை வழக்கறிஞரிடமிருந்து பிடித்தம் செய்யப்படவேண்டும்.

இனம் 3. (தீர்மானம் 71 / 27.05.2022)

நீதிமன்ற வழக்கில் முதல் பிரதிவாதி மாவட்ட ஆட்சியராக சேர்க்கப்பட்டுள்ள நிலையில் உயர்நீதிமன்றத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள அரசு வழக்கறிஞருக்கு பதிலாக பிரைவேட் வழக்கறிஞர் நியமனம் செய்யப்பட்டதற்கான விதிமுறைகளை நகராட்சி ஆணையர் தெரிவிக்கவேண்டும்.

மன்ற தீர்மானத்தின்படி ரூ.15000 + 3000 என்று பதிவு செய்யப்பட்டு பின்னர் ரூ.30,000/– என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் ரூ.5000/– நிதி இழப்பு ரூ25000/– ஆகும்.

இனம் 4 (தீர்மானம் 298 / 30.11.2022)

சென்னை உயர்நீதிமன்றத்திற்கு அரசு வழக்கறிஞர் நியமனம் செய்யப்பட்டுள்ளபோது பிரைவேட் வழக்கறிஞர் அமர்த்துவதற்கு எந்த விதியின்கீழ் அல்லது அரசாணையின்கீழ் நகராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்ற தகவல் இல்லை.

நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் ரூ.5000/– ஆகும் நிதி இழப்பு ரூ.13000/–

இனம் 5 (தீர்மானம் 104 / 22.07.2022)

தீர்மானத்தில் வழக்குகளின் விபரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. உயர்நீதிமன்ற இணைய தளத்தில் தேடுதல் செய்ததில் தீர்மானத்தில் குறிப்பிட்ட வழக்கு எண்கள் காணப்படவில்லை.

கோர்வைக் கட்டணம் ரூ.800 என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் பைலிங் கட்டணம் ரூ.5000/– என்று தீர்மானம் போடப்பட்டுள்ளது. தகுதியான தொகை மூன்று வழக்குகள் என்று வைத்துக்கொண்டாலும் 15000 + 800 மட்டும் தான். ஆனால் ரூ.25000 வழங்கப்பட்டுள்ளது. நிதிஇழப்பு ரூ.9200/–

இனம் 6 (தீர்மானம் எண்.148 / 22.07.2022)

சட்டக் கருத்துரை பெற நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் ரூ.800/– ஆனால் ரூ.20000/– வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தொகை வழங்கப்பட்டிருப்பின் நிதி இழப்பு ரூ.19200/– ஆகும்.

எனவே, வழக்கறிஞர் கட்டணம் மிகையாக வழங்கப்பட்ட தொகையை ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட வழக்கறிஞர், அலுவலர்களிடமிருந்து விகிதாச்சார அடிப்படையில் வசூல் செய்ய உத்தரவும், நம்பிக்கை மோசடி இ.த.ச.409 மற்றும் ஏமாற்றுதல் இதச 420 படி சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கட்டுப்பாட்டு அலுவலர்களுக்கு உத்தரவிடவும். உண்மையான தகவல்களை மறைத்து தவறான தகவல்களை நகர்மன்றத்தில் வைத்தது இ.த.ச. 177, 191, 192–ன்படி குற்றமென்பதால் சம்பந்தப்பட்ட நபர்கள்மீது குற்ற நடவடிக்கை, துறை நடவடிக்கை தொடர கட்டுப்பாட்டு அலுவலர்களுக்கு உத்தரவிடவும் கோருகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 03.04.2023 நாளிட்ட கடிதம் மூலம் மயிலாடுதுறை, நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளர் தனது 23.05.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

இனம் – 1

மயிலாடுதுறை நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். W.P.No.20187 of 2020-ன் மூலம் திரு.N.முரளி என்பவரால் தனக்கு பதவி உயர்வில் ஒட்டுநராக பதவி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

மேற்படி வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.N.இன்பநாதன் என்பவர் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி ஆணையருக்காக வழக்கில் ஆஜராகியுள்ளார். அதற்குரிய வழக்குக்கட்டணம் ரூ.15,000/– வழங்குமாறு கேட்டுக்கொண்டதன்படி, வழக்கின் முக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டு நகராட்சி தீர்மான எண்.1011, நாள் 26.02.2011–ன்படி நிர்வாக நலன் கருதி தொகை வழக்கறிஞருக்கு வழங்கப்பட்டது.

இனம் – 2

நகராட்சி வழக்கறிஞர் திரு.K.ராஜ்மோகன் என்பவருக்கு, நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட 19 வரியில்லா இனங்களுக்கு மாத வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டதற்கான வழக்குகள் மயிலாடுதுறை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. அந்த 19 வழக்குகளுக்கான கட்டணம் செலுத்திட ரூ.1,00,000/– நகர மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி வழக்கறிஞராக இருந்த திரு.K.ராஜ்மோகன் அவர்களுக்கு முன்பணமாக தொகை ஏதும் வழங்கப்படவில்லை.

நகராட்சி வழக்கறிஞர் திரு.K.ராஜ்மோகன் அவர்கள் இதுவரை 19 வழக்குகளில் வாதாடி அவற்றில் 10 வழக்குகள் முடிவுற்றது• அதற்கான தொகை ரூ.25,000/– மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி வழக்கறிஞராக திரு.சங்கரநாராயணன் என்பவர் நகர்மன்ற தீர்மான எண்.61, நாள் 27.05.2022–ன்படி அனுமதி வழங்கப்பட்டு செயல்பட்டு வருகிறார் அவரால் வரியில்லா இனங்கள் தொடர்பான நிலுவையில் உள்ள 9 வழக்குகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

மேலும், நகர மன்றத்தின் அனுமதி பெற்று நிர்வாக நலன் கருதி மேற்கண்ட வழக்கறிஞர் கட்டணம் வழங்கப்பட்டது.

இனம் – 3

மயிலாடுதுறை நகராட்சி 1864 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதாகவும், மயிலாடுதுறை நகராட்சியின் வார்டுகளின் எண்ணிக்கை கடந்த 1991 ஆம் ஆண்டு முதல் 36 வார்டுகளாக பிரிக்கப்பட்டு தற்போதுவரை நடைமுறையில் உள்ளதாகவும், அதன் காரணமாக நகராட்சி எல்லைப்பரப்பு குறைந்து, வளர்ச்சிப் பணிகள் எதுவும் இல்லாமல் மயிலாடுதுறை நகரம் 50 ஆண்டுகள் பின்தங்கி உள்ளது என தெரிவித்து மயிலாடுதுறை நகராட்சி எல்லைகளை சீராய்வு செய்து அருகில் உள்ள கிராமங்களை நகராட்சியுடன் இணைத்து நகராட்சியினை விரிவாக்கம் செய்திட கோரி திருமதி.மஞ்சுளா முருகதாஸ் என்பவரால்

1. தமிழ்நாடு அரசு முதன்மை செயலாளர்.
2. செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
3. மாவட்ட ஆட்சியர், மயிலாடுதுறை
4. ஆணையாளர், மயிலாடுதுறை நகராட்சி.
5. தலைவர், மறுசீராய்வு குழு, தமிழ்நாடு தேர்தல் ஆணையம்.

ஆகியோரை எதிர்வாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் அரசு சார்பாகவும், மாவட்ட ஆட்சியர் சார்பாகவும், நகராட்சி நிர்வாகம் வக்காலத்து அளித்து எதிர்வாதுரை தாக்கல் செய்திட உத்தரவிட்டதின் அடிப்படையில் நகரமன்றத்தின் அனுமதி பெற்று வழக்கின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு நிர்வாக நலன் கருதி நகராட்சிகளின் சட்ட வல்லுநரான திரு. P. ஸ்ரீநிவாஸ், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மூலம் மேற்கண்ட வழக்கினை அரசு சார்பாக நடத்திட வக்காலத்து அளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அவ்வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணத்தொகை வழங்கப்பட்டது.

இனம் – 4

நகராட்சிக்கு எதிராக பொது மக்களால் தொடரப்பட்ட வழக்குகளினால் நகராட்சி நிர்வாகத்திற்கு எவ்வித நிதி இழப்புகளும் ஏற்படாமல் நகராட்சி நிர்வாகத்தின் பணிகளையும், கடமைகளையும் பாதுகாப்பதன் அடிப்படையில் நகர்மன்றத்தின் அனுமதி பெற்று வழக்குகளின் தீவிரத்தினையும், அவசர அவசியத்தினையும் கருத்தில் கொண்டு நகராட்சி சட்ட வல்லுநரான சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. P. ஸ்ரீநிவாஸ் என்பவர் மூலம் வழக்கு நடத்திடக்கோரி வக்காலத்து அளிக்கப்பட்டது. மேற்கண்ட வழக்கறிஞர் வழக்கில் ஆஜராகி மேற்கண்ட வழக்கு நகராட்சி சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. ஆனால் மேற்கண்ட வழக்கறிஞருக்கான கட்டணம் வழங்கப்படவில்லை.

இனம் – 5

வழக்கு எண்கள் விவரம் (1) CRP.No. 697, (2) CRP.No. 716 (3) CRP.No. 732.

மேற்கண்ட மூன்று வழக்குகளுக்கு அரசு வழக்கறிஞர் கேட்பு பட்டியலின்படி நகர்மன்ற தீர்மானத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும், மேற்படி செலவினத்திற்கு முழு விவரங்களுடன் மன்ற தீர்மானத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான வழக்கறிஞர் கேட்பு நகல் மற்றும் மன்ற தீர்மான நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இதில் நிதியிழப்பு ஏதும் இல்லை.

இனம் – 6

மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3, பிளாக் எண்.29, நகரளவு எண்கள்.1000 / 1, 2, 1002, 1003/1, 2 மற்றும் 1004 நாச்சிமுத்து நகர் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பொதுப்பயன்பாட்டு இடத்தினை திரு.நாச்சிமுத்து என்பவர் இறந்தபிறகு அவரது வாரிசுகள் 20.04.2009 அன்று பத்திரப்பதிவு ஆவண எண்.735/2009–ன்படி 5 நபர்களுக்கு நாச்சிமுத்து நகர் பொது உபயோக இடத்தினை கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள். மேற்படி 5 நபர்கள் (1) பத்திரப்பதிவு ஆவண எண்.621/2013, நாள்.27.03.2013–ல் சுத்த கிரய சாசனமும் செய்து கொடுத்துள்ளார். (2) பரிமாற்று ஆவண எண்.622/2013 நாள் 27.03.2013–ல் பொது உபயோக இடம் பரிமாற்ற ஆவணமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட கிரயம்பெற்ற நபர்கள் நாச்சிமுத்து நகர் பொது உபயோக இடத்தினை ஆக்கிரமிப்பு செய்ததில் மயிலாடுதுறை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நாச்சிமுத்து நகர் குடியிருப்போர் நலசங்கம் சார்பாக அதன் (1) தலைவர் கார்த்திகேயன் மற்றும் (2) செயலர் ரபீக் அஹமது ஆகியோர் (1) பிரதான்பாபு (2) சுரேந்திரபாபு (3) சுப்பிரமணி (4) பழனிவேல் (5) ரெங்கநாயகி மற்றும் ஐவர் ஆகியோர் பிரதிவாதியாக சேர்த்து வாதிகள் அனுபவத்திலுள்ள பொது உபயோக இடத்தினை (Public Purpose) பிரதிவாதிகளும், அவர்கள் சார்ந்த நபர்களும் ஆக்கிரமித்து எவ்விதமான கட்டுமானம் அமைக்கக்கூடாது எனவும், பொது உபயோகமாக இருப்பதை இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துகட்டளை கோரி வழக்கு எண்.265/2013–ல் வழக்கு தொடர்ந்ததன் பேரில் 28.09.2017 அன்று மேற்கண்ட நீதிமன்றத் தீர்ப்பில் வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட்டு நாச்சிமுத்து நகர் குடியிருப்பு வாசிகளின் பொது அனுபவத்திலுள்ள பொது உபயோக இடத்தில் (Public Purpose) பிரதிவாதிகளும் அவர்களின் ஆட்களும் ஆக்கிரமித்து எவ்விதமான கட்டுமானத்தையோ அல்லது இடையூறுகளோ செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதனை எதிர்த்து பிரதிவாதிகள் மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு எண்.A.S.No.71/2017–ல் வழக்கு தொடர்ந்துள்ளதன்பேரில் 25.04.2019 அன்று முதன்மை மாவட்ட நடுவர் நீதிமன்றத்தால் அசல் வழக்கு எண்.265/2013, நாள் 13.09.2017–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்யப்பட்டு மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதனை, எதிர்த்து நாச்சிமுத்து நகர் குடியிருப்போர் நலச்சங்கம், சென்னை, உயர்நீதி மன்றத்தில் இரண்டாவது மேல்முறைமீடு வழக்கு எண்.S.A. No.794/2019–ல் பிரதிவாதி 10 பேர் மீது வழக்கு தொடர்ந்ததில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 24.01.2022 அன்றைய தீர்ப்பில் மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண். A.S.No.71/2017–ல் நாள் 25.04.2019–ல் வழங்கியுள்ள தீர்ப்பினை ரத்து செய்து மயிலாடுதுறை மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றம் வழக்கு எண். O.S.No.265/2013–ல் செப்டம்பர் 2017–ல் வழங்கியுள்ள தீர்ப்பையும், நிரந்தர உறுத்துக்கட்டளையையும் உறுதி செய்து வாதியின் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை ஏற்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் (24.01.2022) அளித்துள்ள தீர்ப்பு, நாச்சிமுத்து நகர் குடியிருப்போர் நலசங்க தலைவர் வழங்கிய மனு மற்றும் மயிலாடுதுறை நகராட்சி நிலை வழக்கறிஞரின் சட்ட ஆலோசனை ஆகியவற்றை நகராட்சி கவனமுடன் பரிசீலித்து பின்னர் மேற்கண்ட இடத்தில் நகராட்சியால் சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பின்படி அத்துமீறி தனிநபர் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது எனவும் எச்சரிக்கை பலகை வைக்கப்பட்டு, பூட்டிசீல்

வைக்கப்பட்டது. இதனால் ரூ.75/– இலட்சம் மதிப்புள்ள பொது பயன்பாட்டு வகைபாடுடைய சொத்து தனிநபர்கள் வசம் செல்வது தடுக்கப்பட்டுள்ளது.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில், இரண்டாவது மேல் முறையீடு வழக்கு எண். S.A. No.794/2019–ல், நாள் 24.01.2022–ல் வழங்கியுள்ள தீர்ப்பில், மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் வழங்கியுள்ள தீர்ப்பினை ரத்து செய்து மயிலாடுதுறை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு O.S.No.265/2013–ல் செப்டம்பர் 2017–ல் நாச்சிமுத்து நகர் பொதுபயன்பாடு வகைபாடுடைய இடத்தில் பிரதிவாதி யாரும் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது எனவும், எவ்விதமான கட்டுமானத்தை மேற்கொள்ளக் கூடாது எனவும், இடையூறு செய்யக்கூடாது எனவும், நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கிய தீர்ப்பினை உறுதி செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தீர்ப்பு வழங்கிய நாள் 24.01.2022–லிருந்து இதுநாள் வரையில் பொதுமக்கள் பயன்பாடு என்ற வகைபாடுடைய இடத்தில், பிரதிவாதியாகிய திருவாளர்கள் V.பழனிவேல் மற்றும் 9 நபர்களால் கட்டப்பட்ட கட்டடத்தினை அகற்றிக்கொள்ளாமல் இருந்ததால், சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி மேற்கண்ட பொது உபயோக இடத்தினை மக்கள் பொதுபயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென்ற நாச்சிமுத்து நகர் குடியிருப்போர் நலசங்கத்தின் விண்ணப்பத்தின்படியும், மேற்கண்ட வழக்கு உத்தரவின் மீது நகராட்சி மேற்கொண்ட நடவடிக்கை குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோர் அறிக்கை கோரியதன் அடிப்படையிலும், மேற்கண்ட பொது உபயோக இடத்தில் தனிநபர் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என நகராட்சியால் அறிவிப்பு பலகை வைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, மேற்கண்ட பொது உபயோக சொத்தின் உரிமையாளர்களில் ஒருவரான வாதி திரு.பழனிவேல் என்பரின் மகனான தற்போது திருத்துறைப்பூண்டி நகராட்சியில் நகராட்சிப் பொறியாளர் (ம) ஆணையர் (பொறுப்பு) ஆக பணி புரிந்துவரும், திரு.பி.பிரதான்பாபு என்பவரால் உச்சநீதிமன்றத்தில் வழக்கு எண்.SLP (C) No (S) 8130/2022–ன்படி SLP மனு தாக்கல் செய்யப்பட்டு, 06.05.2022 தேதிய அம்மனு மீதான உத்தரவில் மேற்கண்ட பொது உபயோக இடம் தற்போது உள்ள நிலையிலே இருக்க வேண்டும் (Status Quo) என உத்தரவிடப்பட்டு வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது.

எனவே மேற்கண்ட உச்ச நீதிமன்ற உத்தரவின் மீதும், மேற்கண்ட வழக்கு சொத்தின் மீதும் சட்ட கருத்துரை வழங்கிடவும், செலவினத்தொகை ரூ.20,000/–க்கு நகரமன்றத்தில் அனுமதியும் பெற்று நிர்வாக நலன் கருதி, சென்னை உயர்நீதி மன்ற அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு.ஏ.எட்வின்பிரபாகர் என்பவரிடம் சட்டக்கருத்துரை பெறப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட வழக்குக்கட்டணம் வழக்கறிஞருக்கு வழங்கப்படவில்லை என்பதை தெரிவிக்கிறேன்'' என நகராட்சி ஆணையாளர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**(3) மனுதாரரும் மற்றும் மயிலாடுதுறை நகராட்சி ஆணையரும் 27.07.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.07.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**(4) மனுதாரர் திரு.V.பழனிவேலு, 27.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:**

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை நகராட்சியில் வழக்கறிஞர்களுக்கு வழங்கப்படும் கட்டணம் அதிகமாக வழங்கப்பட்டு வருவதைத் தொடர்ந்து வழக்கறிஞர்களுக்கு

வழங்கப்படும் கட்டணம் குறித்து என்னால் விவரம் கோரப்பட்டது. ஆனால் நகராட்சியால் இதுவரை மேற்கண்ட விவரம் வழங்கப்படவில்லை. மேற்கண்ட வழக்கறிஞர்களுக்கு வழங்கப்படும் கட்டணம் நகராட்சியால் வழங்கப்பட்ட பின்னர், அதற்கான பின்னேற்பும் முறையாக நகராட்சியால் பெறப்படுவதில்லை. மேற்கண்ட கட்டணம் வழங்கும்போது ECS மூலம் நகராட்சியால் வழங்கப்படாததால், மேற்கண்ட தொகை முறையாக வழக்கறிஞர்களுக்கு செல்கிறதா என்பது குறித்து சந்தேகம் உள்ளது. மேற்கண்ட வழக்கறிஞர் கட்டணங்கள் கூடுதலாக அளிக்கப்படுவதால் மக்களின் வரி பணம் வீணடிக்கப்படுகிறது.

மேலும், மாநில சட்ட உதவிக் குழு நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதலாக அளிக்கப்பட்ட விவரங்கள் எனது 27.7.2023 நாளிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதால், மேற்கண்ட 27.7.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(5) மனுதாரர் திரு.V.பழனிவேலு என்பவர் தனது 27.07.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட கூடுதல் விவரங்களை சமர்ப்பித்துள்ளார்.

இனம் 1 (தீர்மானம் 1011 / 26.02.2021)

சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். டபிள்யு.பி. 23939/2022, 27703/2014–ல் குறிப்பிட்டவாறு திரு.பி.ஸ்ரீநிவாஸ் என்பவர்தான் நகராட்சி நிர்வாகம் தரப்பில் நிலையான வழக்கறிஞர் ஆவார். Standing Counsel for Municipal Admn. எனவே, திரு.இன்பநாதன் என்பவரை நகராட்சி வழக்கறிஞராக நியமித்தது அதிகார துஷ்பிரயோகம் ஆகும்.

உயர்நீதிமன்ற வழக்கில் ஆஜராகும் வழக்கறிஞருக்கான கட்டணம் ரூ 5000/– என்று அரசாணை எண்.356/ பொது (சட்ட) துறை நாள்.24.04.2017–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வழக்கறிஞருக்கு ரூ.15,000/– வழங்கப்பட்டுள்ளது. எனவே நிதி இழப்பு ரூ.10,000/– ஆகும்.

இனம் 2 (தீர்மானம் 1177 / 30.11.2021)

நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.ராஜ்மோகன் என்பவருக்கு ரூபாய் ஒரு இலட்சம் வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நகராட்சி ஆணையரின் கடித எண்.1171/22 நாள் 10.05.2023–ன்படி ரூபாய் ஒரு இலட்சத்திற்கு தீர்மானம் பெற்று ஒன்பது வழக்குகளுக்கு ரூ.25,000/– வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கு முடிந்த பின்னர்தான் பட்டியல் பெற்று தொகை வழங்கப்பட வேண்டும் முன்பணமாக ஒட்டு மொத்த தொகைக்கு தீர்மானம் பெற நகராட்சி சட்ட விதிமுறைகளில் அல்லது அரசாணையில் முன்பணம் வழங்க வகை செய்யப்படவில்லை. கீழமை நீதிமன்ற வழக்குகளில் வழக்கறிஞருக்கான கட்டணம் வழக்கு ஒன்றுக்கு ரூ.650/– என்று அரசாணை எண்.36 உள்(நீதிமன்ற) துறை நாள்.12.01.2011–ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி ஒன்பது வழக்குகளுக்கு ரூ.5,850/– மட்டும் வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் ரூ.25,000/– வழங்கப்பட்டதாக ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி மிகையாக வழங்கப்பட்ட தொகை ரூ.19150/– நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் முடிக்கப்பட்டதாக தெரிவித்துள்ள வழக்கு விபரமும் தரப்படவில்லை, ரூ.25,000/– மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது நம்பக்கூடிய தகவலாக இல்லை. இதனை உறுதி செய்ய சம்பந்தப்பட்ட காசோலை முன்னிலைப்படுத்தப்படவேண்டியுள்ளது.

திரு.ராஜ்மோகன் என்ற வழக்கறிஞர் நகராட்சி தீர்மானம் எண்.61/27.05.2022–ன்படி மாற்றம் செய்யப்பட்டு திரு.எஸ்.சங்கரநாராயணன் என்பவர் நகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். நீதிமன்ற இணைய தளத்தை பார்வையிட்டதில் 10 வழக்குகள் நிலுவையில் உள்ளதாக காணப்படவில்லை. இதற்கான விபரமும் ஆணையர் வழக்கு எண் விபரத்தை முன்னிலைப்படுத்த வேண்டும்.

இனம் 3. (தீர்மானம் 71 / 27.05.2022)

நீதிமன்ற வழக்கில் முதல் பிரதிவாதி மாவட்ட ஆட்சியர் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் உயர்நீதிமன்றத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள திரு.பி.ஸ்ரீநிவாஸ் என்பவர் அரசு வழக்கறிஞர் இல்லை என்று நகராட்சி ஆணையரின் 19.05.2023 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். டபிள்யு.பி. 23939/2022–ல் திரு.பி.ஸ்ரீநிவாஸ் என்பவர் Standing Counsel என்று பதிவு செய்யப்பட்டு, தாம்பரம் நகராட்சிக்காக ஆஜராகியுள்ளார். எனவே பொய்யான தகவலை நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

மன்ற தீர்மானத்தின்படி ரூ.15000 + 3000 என்று பதிவு செய்யப்பட்டு பின்னர் ரூ.30,000/– என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் ரூ.5000/– நிதி இழப்பு ரூ.25,000/– ஆகும். இதற்கான விளக்கம் எதுவும் நகராட்சி ஆணையர் இவரது 19.05.2023 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கவில்லை. பட்டியல் பெறாமலேயே ரூ.30,000/– க்கு மன்றத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது முறைகேடாகும். குத்துமதிப்பாக ஒரு தொகைக்கு மன்றத் தீர்மானம் பெற்றுக்கொண்டு பின்னர் குறைவான தொகை வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளது மிக மிக மோசமான தகவல் ஆகும். இதனை உறுதி செய்ய சம்பந்தப்பட்ட காசோலையை ஆணையர் முன்னிலைப்படுத்தவேண்டும். மேலும் தனி நபருக்கு அனுப்பக்கூடிய தொகை யாவும் Digital முறையில் E.C.S மூலம் அனுப்பாததும் தவறாகும். மேலும் அரசு ஆணையில் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் ரூ.5,000/– ஆகும். எனவே இந்த இனத்திலும் ரூ.10,000/– நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

இனம் 4 (தீர்மானம் 298 / 30.11.2022)

சென்னை உயர்நீதிமன்றத்திற்கு Standing Counsel அரசு வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீநிவாஸ் என்பவர் நியமனம் செய்யப்பட்டுள்ளபோது அரசாணை எண்.356/ பொது (சட்ட) துறை நாள்.24.04.2017–ன்படி அரசு வழக்கறிஞர், சிறப்பு வழக்கறிஞர் ஆகியோருக்கு மாத ஊதியம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கறிஞருக்கு ரூ.18,000/– வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் தொகை வழங்கப்படவில்லை என்று 19.05.2023 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே எந்த அடிப்படையும் இல்லாமல் எந்தவித பட்டியலும் கேட்புக் கடிதமும் இல்லாமல் ரூ.18,000/– வழங்க தீர்மானம் நிறைவேற்றியுள்ளது மோசடியானதாகும்.

இனம் 5 (தீர்மானம் 104 / 22.07.2022)

தீர்மானத்தில் குறிப்பிட்ட வழக்குகள் (WP.S.A.CMP) விபரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. உயர்நீதிமன்ற இணைய தளத்தில் தேடுதல் செய்ததில் தீர்மானத்தில் குறிப்பிட்ட வழக்கு எண்கள் காணப்படவில்லை. திரு. ஹரிஸ் என்பவர் நகராட்சி வழக்கறிஞர் அல்ல. இனம் 1–ல் குறிப்பிட்டவாறு நகராட்சி நிர்வாகத்திற்கான Standing Advocate திரு.பி.ஸ்ரீநிவாஸ் ஆவார். ஆனால் தன்னிச்சையாக செயல்பட்டு தனி வழக்கறிஞர் நியமனம்

செய்து அவருக்கு கட்டணம் ரூ.25,000/— வழங்கப்பட்டதாக நகராட்சி ஆணையர் 19.06.2023 கடிதத்தில் தெரிவித்துள்ளார். அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் ரூ.5,000/— ஆகும். எனவே நிதி இழப்பு ரூ.20,000/— ஆகும்.

இனம் 6 (தீர்மானம் எண்.148 / 22.07.2022)

சட்டக் கருத்துரை பெற நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் ரு.800/— ஆனால் ரூ.20000/— வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தொகை வழங்கப்படவில்லை என்று 19.05.2023 நாளிட்ட கடிதத்தில் ஆணையர் தெரிவித்துள்ளார். எனவே உத்தேசமாக மன்றத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது மோசடியான செயலாகும். சட்டக் கருத்துப் பெற்ற பின்னர் பட்டியல் பெற்ற பின்னரே மன்றத்தில் வைக்கவேண்டும்.

இதுபோன்ற இனங்களில் தன்னிச்சையாக மிக அதிக தொகைக்கு எந்தவித திட்ட மதிப்பீடும், கோரிக்கை பட்டியலும் இன்றி ஒட்டு மொத்த தொகைக்கு மன்றத் தீர்மானம் பெற்றுக்கொண்டு அதன் பின்னர் எந்தவித செலவினப் பட்டியலும் மன்றத்தில் வைக்காமல் தொகையை தன்னிச்சையாக செலவிட்ட பல இனங்கள் உள்ளன.

மேலும் தீர்மானம் எண்.148/ 22.07.2022 மன்றத்தில் வைக்கப்பட்டதில் கூடுதல் புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறு முழுமையான தகவல்களை மன்றத்தில் வைக்காமல் பொய்யான தகவல்களை மன்றத்தில் வைத்து ஒப்புதல் பெற்றுள்ளது மோசடியான செயலாகும்.

எனவே எனது முதல் புகார் மனு வைத்த கோரிக்கையின்படி உத்தரவு வழங்க மாண்பமை நடுவர் அவர்களை பணிவுடன் வேண்டுகிறேன்'' என்றும் தெரிவித்துள்ளார்.

(6) எதிர்மனுதாரரான மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளருக்கு பதிலாக மயிலாடுதுறை நகராட்சியில் மேலாளர் பொறுப்பில் பணியாற்றும் திரு.சீ.பாலசுந்தரம் என்பவர் 27.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''மனுதாரர் தனது மனுவில் மயிலாடுதுறை நகராட்சியில் பல்வேறு வழக்குகளில் ஆஜரான வழக்கறிஞர்களுக்கு அதிகக் கட்டணம் (Fees ) வழங்கப்படுவதாக கூறுவது உண்மைக்கு மாறானதாகும். வழக்கிற்கான கட்டணங்களை அளிக்கும்போது ஒவ்வொரு வழக்கின் தன்மையைக் கருத்தில்கொண்டும், வழக்கறிஞருக்கேற்பவும் மன்றத் தீர்மானம் பெறப்பட்டு மாநில சட்ட உதவிக் குழு நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதலாக வழங்கப்படுகிறது. மேலும், மேற்கண்ட கட்டணங்களை வழங்கும்போது நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்தோ அல்லது மண்டல நிர்வாக இயக்குநரிடமிருந்தோ அதற்கான பின்னேற்பு ஆணை பெறப்படுவதில்லை எனவும், மேலும் மேற்கண்ட கட்டணத்தொகையை அந்தந்த வழக்கறிஞர்களுக்கு வழங்கும்போது காசோலையாக அளிக்கப்படுகின்றன என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்திற்கு அனுப்பப்பட்ட மயிலாடுதுறை ஆணையரின் 23.5.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், அறிக்கை, மயிலாடுதுறை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மயிலாடுதுறை நகராட்சி மேலாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மயிலாடுதுறை மாவட்டம், கொறநாட்டைச் சார்ந்த மனுதாரர் திரு.V.பழனிவேலு என்பவர் தனது 16.03.2023 நாளிட்ட மனுவில், மயிலாடுதுறை நகராட்சி தொடர்புடைய நீதிமன்ற வழக்குகளில் வழக்காடிய வழக்கறிஞர்களுக்கு அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதலாக தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டதாகவும், தனியார் வழக்கறிஞர் மூலம் வழக்குகள் கையாளப்பட்டதாகவும் மற்றும் வழக்குகள் குறித்து தவறான தகவல்கள் மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளரால் நகர்மன்றத்தில் அளிக்கப்பட்டதாகவும் 6 இனங்களில் புகார் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் மனுதாரர் திரு.V.பழனிவேலு என்பவர் குறிப்பிட்டுள்ள புகார் குறித்து, மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளர் தனது விளக்கத்தில், நகராட்சிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்தல், மாத வாடகை மறுநிர்ணயம் கோருதல், நகராட்சி எல்லையினை விரிவாக்கம் கோருதல், நகராட்சி பணியாளர் பதவி கோருதல் போன்றவற்றிக்கு எதிராக நகராட்சி சார்பாக மாண்பமை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டும், நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்திடவும், வழக்குகளின் அவசர மற்றும் அவசியத்தையும் கருத்தில் கொண்டும் நகராட்சியின் சட்ட வல்லுநர் மூலம் உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் வாயிலாக வழக்குகள் நடத்தப்பட்டு நகராட்சி சார்பாக தீர்ப்புகள் பெறப்பட்டுள்ளன.

இந்நிலையில், உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர்களுக்கு அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட வழக்கறிஞர் கட்டண தொகையைவிட கூடுதலாக ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும், ஆனால், மேற்காணும் இனங்களில் ஏற்பட்ட செலவினங்களுக்கு நகராட்சி நகர்மன்றத்தின் தீர்மானத்தின் மூலம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும் நகராட்சி ஆணையாளரின் அறிக்கையின் மூலம் தெரிய வருகிறது. மேலும் மேற்காணும் கட்டணங்கள் வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து பின்னேற்பு ஆணை பெறப்படவில்லை என நகராட்சி மேலாளர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை நகராட்சிக்கு எதிராக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள் மற்றும் நகராட்சியால் தொடரப்பட்ட வழக்குகளில், வழக்கின் தன்மை, அவசியம் மற்றும் அவசரத்தை கருத்திற்கொண்டு, நீதிமன்ற மூத்த வழக்கறிஞர்கள் மூலமாக வழக்கு நடத்தப்பட்டதன் காரணமாக, வழக்கறிஞர்களுக்கு வழங்கப்படும் கட்டணத் தொகை, அரசால் நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்ட தொகைக்கு கூடுதலான தொகை ஒப்பளிப்பு செய்துள்ளதாக மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட இனங்களுக்கு நகராட்சி நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஒப்புதல் பெறப்பட்டிருப்பினும், அரசு நிர்ணயம் செய்த தொகையைவிட கூடுதல் தொகை ஒப்பளிப்பு செய்த நகராட்சி ஆணையரின் செயலுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரின் பின்னேற்பு ஆணை பெறப்படவில்லை. மேலும் வழக்கறிஞரிடமிருந்து கேட்பு பட்டியல் பெறப்படாமலேயே, வழக்கறிஞரின் கட்டணத் தொகை நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அத்தொகை வழக்கறிஞர்களுக்கு வழங்கியமைக்கான ஒப்புகை சீட்டு ஏதும் பெறப்படவில்லை என்பது புலனாகிறது.

மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளரின் இத்தகைய பொறுப்பற்ற செயலினை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது. மனுதாரரால் புகாராக தெரிவிக்கப்பட்ட, அரசு நிர்ணயம் செய்துள்ள வழக்கறிஞர் கட்டணத் தொகையைவிட கூடுதலான தொகை ஒப்பளிப்பு செய்த மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளரின் செயலுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து பின்னேற்பு ஆணை மற்றும் இதுவரை வழங்கப்பட்ட தொகைகான உரிய ஒப்புகை இரசீது பெற்று அதன் அறிக்கையை 2 மாத காலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.V.பழனிவேலு,
48, திருமஞ்சனவீதி, கொறநாடு,
மயிலாடுதுறை – 609 001, மயிலாடுதுறை மாவட்டம்.

2) ஆணையாளர், மயிலாடுதுறை நகராட்சி,
மயிலாடுதுறை – 609 001, மயிலாடுதுறை மாவட்டம்.

3) இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை,
571, அண்ணாசாலை, நந்தனம், சென்னை 600 035.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

17/08/23

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032